

## திருச்சி, துறையூர் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம்:

# பா.ஜ.க.வையும் அவர்களின் பழைய, புதிய அடிமைகளையும், கழகத்தின் கொள்கை உணர்வுடன் எதிர்கொள்வோம்!

## துறையூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

திருச்சி,அக்.11-

**திருச்சி மாவட்டம், துறையூரில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட - ஒன்றிய - நகர - பேரூர் - கிளைக் கழக நிர்வாகிகள் - சார்பு அணி மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகளின் கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், ''பா.ஜ.க.வையும் அவர்களின் பழைய, புதிய அடிமைகளையும், கழகத்தின் கொள்கை உணர்வுடன் எதிர்கொள்வோம்'' என்று அவர் குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

நேற்று காலை இதே திருச்சியில் திருவரங்கம் தொகுதியில் தொடங்கிய ஆலோசனைக் கூட்டம், திருச்சி தொடங்கி, திண்டுக்கல் சென்று அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, மீண்டும் இன்று திருச்சி வடக்கு மாவட்டத்துக்கு வந்து, துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளான உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

குறுகிய காலத்தில் இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள கழகத்தின் முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் முதலில் எனது அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தீரர் கோட்டம் திருச்சி

தீரர் கோட்டமாம் திருச்சி மாவட்டத்துக்குப் பல்வேறு சிறப்புகள் உண்டு. கழகத்துக்கு பல திருப்புமுனைகளைத் தந்தது, இந்த திருச்சி மாவட்டம் தான். தமிழ்நாட்டின் வரைபடத்தில் மட்டும், மத்தியில் இருப்பது திருச்சி கிடையாது, தமிழ்நாட்டின் அரசியலிலும் மத்தியில் இருப்பது திருச்சிதான்.நம் திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் அரசியலுக்கு வரவேண்டுமா, வர வேண்டாமா என்பதைத் தீர்மானித்த மாவட்டம், இந்த திருச்சி மாவட்டம்தான். அண்ணா அவர்கள் திருச்சியில்தான், கழகம் தேர்தல் அரசியலுக்கு வரலாமா, வேண்டாமா என்ற வாக்கெடுப்பை நடத்தினார். இன்று நம் கழக உடன்பிறப்புகள் நம் கழகத்தை, இந்த நிலைமைக்குக் கொண்டு வந்துள்ளீர்கள். நம் தேர்தல் அரசியல், திருச்சியிலிருந்துதான் தொடங்கியது என்று சொன்னால், அது மிகையாகாது.

கழகத்தின் தேர்தல் அரசியல் மட்டுமல்ல, கலைஞரின் தேர்தல் அரசியலையும் தொடங்கி வைத்தது அன்றைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த குளித்தலை தொகுதிதான். அந்தத் தொகுதியிலிருந்துதான் கலைஞர் அவர்கள் முதல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குளித்தலையில் தொடங்கி, அவர் நின்ற அனைத்துத் தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர் என்ற சிறப்பு நம் கலைஞர் அவர்களுக்கு மட்டும்தான் உண்டு. நம் கழகங்கூட சில வெற்றி வாய்ப்புகளை இழந்திருக்கிறது. ஆனால், நம் கலைஞர் அவர்களைத் தோற்கடிக்க எவரும் கிடையாது என்பதை அவர், தன் வாழ்க்கையின் சாதனையாக அமைத்துக் கொண்டார்.

### கழகத்தின் அடித்தளம்

நம் கழகத் தலைவர் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டு. நம் தலைவர் அவர்கள் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று கழகம் சந்தித்த அனைத்து தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர், நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அதற்கு காரணம் நம் கழகத்துக்காக உழைத்துக்கொண்டு இருக்கின்ற உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் இந்த நம் கழகமும், கலைஞரும், நம் தலைவரும் கிடையாது. கழகத்தின் அடித்தளமே இங்கு வந்துள்ள உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்.

இன்று நம் கழகம் 75 ஆண்டுகளைக் கடந்து, 76-வது பிறந்த நாளை கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். இந்த 75 வருடமாக எத்தனையோ சோதனைகள், வெற்றி-தோல்விகள், போராட்டங்கள், துரோகங்கள், நெருக்கடிகள், நெருப்பாறுகளை எல்லாம் நம் கழகம் கடந்து வந்துள்ளது. மிகப்பெரிய அரசியல் தலைவர்களைப் பார்த்த இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். மிகப்பெரிய அரசியல் தலைவர்களை எல்லாம் எதிர்த்து, போராடி வென்ற இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம். 76 - வது வயதிலும் நம் இயக்கம் அதே இளமையோடும், அதே துடிப்போடும், அதே வேகத்தோடும், உறுதியோடும், வலிமையோடும் வெற்றி நடைபோட்டுக்கொண்டு இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் வந்திருக்கின்ற உடன்பிறப்புகள் நீங்கள்தான்.

நீங்கள் என்னைப் பார்க்க வந்த கூட்டம் கிடையாது. நான் என்ன பேசுகிறேன் என்பதை கூர்ந்து கவனித்து கேட்க வந்த கூட்டம். நமக்கு செல்பி மிக முக்கியமில்லை, செல்ப் ரெஸ்பெக்ட்தான் மிக முக்கியம். சுயமரியாதைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் உங்களின் உழைப்பால்தான் நம் தலைவர் அவர்களின் ஆட்சி அமைந்தது. அரசு அமைத்த முதல் நாளிலிருந்து பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார். ஆட்சிக்கு வந்தவுடன் நம் தலைவர் அவர்கள் முதல் நாள் ஐந்து கையெழுத்துகளைப் போட்டார் நம் தலைவர் அவர்கள். அதில் முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணத்திற்கான கையெழுத்துதான். அந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும், இந்த நான்கரை வருடத்தில் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

ஆண்களைவிட நாம் பெண்களிடம்தான் திட்டத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 40 கோடிக்கும் அதிகமான பயணங்களை இந்த மகளிர் விடியல் திட்டத்தின் மூலம் மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

### காலை உணவுத் திட்டம்

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒரு நாள் நம் தலைவர் அவர்கள் ஆய்வுக்காக ஒரு அரசு பள்ளிக்கூடத்துக்குச் சென்றார். அங்கு ஒரு குழந்தை மிகவும் சோர்வாக உட்கார்ந்து இருந்தது. அந்த குழந்தையை அழைத்துப் பேசினார். `என்ன பாப்பா ஏன் சோர்வாக இருக்கிறாய்? என்று கேட்டார். அந்த குழந்தை, `ஐயா காலையிலிருந்து சாப்பிடவில்லை. பசியோடு இருக்கிறேன்' என்று சொன்னது. தலைவர் அவர்கள் அதைக் கேட்டு, அங்கேயே அறிவித்த திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு வழங்கப்படும். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

அரசு பள்ளியில் படித்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்க வைக்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் மாணவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. உயர்கல்வியில் சேரும் மாணவர்கள் 42 சதவிகிதத்துடன் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம் தமிழ்நாடு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுகிறார்கள்.

இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்த 15 நாட்களுக்கு முன்பு ஒரு நிகழ்ச்சியை நடத்தினார். அந்த நிகழ்ச்சியில் தெலங்கானாவின் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அப்போது தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் என்ற இரண்டு திட்டங்களையும் தெலங்கானாவில் இந்த கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப் போகிறேன் என்று பெருமையாகச் சொன்னார். மற்ற மாநிலங்களுக்கும், மற்ற முதலமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பவர்தான் நம் முதலமைச்சரும், நம் மாநிலமும் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இப்படி பல்வேறு திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இல்லம் தேடி கல்வி, நம்மைக் காக்கும் 48, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை, வேலைவாய்ப்பு, தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

### மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். நாம் ஆட்சிக்கு வரும்போது கடும் நிதிநெருக்கடி இருந்தது. கிட்டத்தட்ட 6 மாதம் காலம் நாம் கொரோன பெருந்தொற்றுடன் போராடிக் கொண்டு இருந்தோம். எதிர்க்கட்சிகள் எல்லாம் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தைச் செயல்படுத்தவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிட்டத்தட்ட ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். சில இடங்களில் இந்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வரவில்லை என்று சில குறைகள் இருக்கின்றன. அதை நாங்கள் தலைவரிடம் சொன்னோம். உடனே தலைவர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கான விதிமுறைகளைத் தளர்த்தியுள்ளார்.

உங்களுடன் ஸ்டாலின் என்று மக்கள் குறைகளை, கோரிக்கைகளைப் போக்கிடும் முகாம்களை நடத்தினோம். அந்த முகாம்களில் 60 சதவிகித மகளிரின் கோரிக்கை, மகளிர் உரிமைத்தொகை வேண்டும் என்ற கோரிக்கைதான். இன்னும் இரண்டு மாதங்களில் விடுபட்ட தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் மகளிர் உரிமைத்தொகையை நிச்சயம் வழங்கப்படும்.

நம் அரசு கல்விக்காக செயல்படுத்துகிற திட்டங்களில் ஏழை, எளிய மாணவர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து பல சாதனைகளைச் செய்து வருகிறார்கள். இந்த தொகுதியில் உள்ள பச்சமலையைச் சேர்ந்த தங்கை ரோகிணி, சென்ற வருடம் ஜே.இ.இ. தேர்வில் தேர்ச்சி பெற்று, திருச்சி என்.ஐ.டி-யில் படிக்கிறார் என்றால், நம் அரசு அவருடன் இருந்து ஊட்டிய ஊக்கம்தான் காரணம். அவரின் கிராமத்துக்கே சென்று தங்கை ரோகிணியை வாழ்த்திவிட்டு வந்தேன்.

### பொருளாதார வளர்ச்சி

இதுபோன்ற பல முற்போக்கான திட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் 11.19 சதவிகிதம் வளர்ச்சியுடன் முதல் மாநிலமாக நம் தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சி பிடிக்காமல்தான் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு இங்கு இருக்கின்ற அடிமைகளோடு சேர்ந்து பிரச்சினைகள், சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். அந்தத் தடைகளை எல்லாம் உடைத்து, நம் முதலமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான ஆட்சியை நம் தமிழ்நாட்டு மக்களுக்காக கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமை, மாநில உரிமையைப் பறிக்கின்ற வேலைகளை ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறது. இவற்றையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கின்ற இந்தியாவிலேயே ஒரே தலைவராக நம் தலைவர் அவர்கள் திகழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவும் நம் தலைவர் அவர்கள் என்ன முடிவெடுகிறார் என்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கிறது.



பிரிந்து இருந்த அடிமைகளும், பாசிஸ்ட்டுகளும் மீண்டும் ஒன்றாகச் சேர்ந்து வருகிறார்கள். யாருக்கும் தெரியாமல் எடப்பாடி அவர்கள் நான்கு கார்கள் மாறி, டெல்லிக்கு சென்று கூட்டணி வைத்துவிட்டு வந்துள்ளார். காரை மாற்றுவதும், கால்களை மாற்றுவதும் அவருக்குப் புதிது கிடையாது. இன்று நிரந்தரமாக மோடியின் கால்களில் சரணடைந்துள்ளார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். நம் கழகத்தின் தலைமை அலுவலகம் அண்ணா அறிவாலயம், சென்னையில் இருக்கிறது. நம் கட்சியில் உட்கட்சிப் பிரச்சினை என்றால் அனைவரும் சென்னை, அண்ணா அறிவாயலத்துக்கு வருவார்கள். தலைவரையும், முதன்மைச் செயலாளரையும் பார்த்து முறையிடுவார்கள். ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகம் டெல்லி அமித் ஷா வீட்டில் இருக்கிறது.

நம் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, வழக்கறிஞர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, கல்வியாளர்கள் அணி என்று பல்வேறு அணிகள் இருக்கின்றன. ஆனால், அதைவிட அதிகமாக அணிகள் அ.தி.மு.க-வில் இருக்கின்றன. ஓ.பி.எஸ். அணி, ஈ.பி.எஸ். அணி, டி.டி.வி. அணி, செங்கோட்டையன் அணி, சசிகலா அணி, ஜெ.தீபா அணி, ஜெ.தீபா டிரைவர் அணி என்று பல அணிகள் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் வெல்லம் மண்டி நடராஜன் அணி, வளர்மதி அணி, பரஞ்ஜோதி அணி, என்று பிரிந்து நிற்கின்றது அ.தி.மு.க.

சமீபத்தில், டெல்லிக்குச் சென்று அமித் ஷாவைப் பார்த்துவிட்டு, எந்தக் கோலத்தில் வெளியே வந்தார் என்று நாம் அனைவரும் பார்த்தோம். வெளியே வரும்போது முகத்தை மூடிக்கொண்டே வந்தார். அவரிடம் பத்திரிகையாளர்கள் ஏன் முகத்தை மூடிக்கொண்டு வந்தீர்கள் என்று கேட்டால், அவர் உடனே முகத்தை மூடியது தப்பா, முகம் வியர்த்தது என்று சொன்னார். அவருக்கு முகம் வியர்க்கவில்லை, அவரின் கண்கள் வியர்த்து இருக்கின்றன என்று நான் சொல்கிறேன். இன்று தமிழ்நாட்டு மக்கள் அவரை எடப்பாடி பழனிசாமி என்று அழைப்பது கிடையாது. செல்லமாக `முகமூடி பழனிசாமி' என்றுதான் அழைக்கிறார்கள்.

இன்றைக்கு அ.தி.மு.க என்னும் அடிமைக் கூட்டம் போதவில்லை என்று, புதிய அடிமைகளையும் பா.ஜ.க. வலைவீசி தேடிக்கொண்டு இருக்கிறது. விரைவில் அவர்களுக்கு அடிமைகள் மாட்டுவார்கள். ஆனால், எத்தனை அடிமைகள் வந்தாலும் கருப்பு - சிவப்பு கரை துண்டு போட்ட தி.மு.க.வின் கடைசி தொண்டன் இருக்கிற வரை, நீங்கள் தமிழ்நாட்டுக்குள் உங்களின் பாச்சா வேலைகளெல்லாம் இங்கே பலிக்காது.

### உடன்பிறப்பே வா

நம் தலைவர் அவர்கள் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்ற இலக்கை கொடுத்துள்ளார்கள். தலைவர் அவர்கள் சென்னையில் `உடன்பிறப்பே வா' என்ற முன்னெடுப்பின் மூலமாக ஒவ்வொரு சட்டமன்றத்தில் இருக்கின்ற மிக மிக முக்கியமான நிர்வாகிகளை வரவழைத்து, சென்னையிலேயே ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி வருகிறார்.

தலைவர் அவர்கள் எனக்கு ஒரு பணியைக் கொடுத்துள்ளார். ``நான் சென்னையில் பார்க்கிறேன், நீ தமிழ்நாடு முழுவதும் சென்று அத்தனை நிர்வாகிகளையும் சந்தித்து அவர்களின் கருத்துகளைப் பெற்று, ஆலோசனை செய்துவிட்டு வா'' என்று அனுப்பி வைத்தார்கள். நான் பயணம் செய்கின்ற 10-வது தொகுதி இந்த துறையூர். நான் பார்த்த இந்த 10 தொகுதிகளில் மக்களின் வரவேற்பு, எழுச்சி, கழக நிர்வாகிகளின் உணர்வுகளை எல்லாம் பார்க்கும்போது நிச்சயம் சொல்கிறேன், மீண்டும் தி.மு.க. வெற்றிப்பெறப்போவது உறுதி.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என். நேரு மாவட்டக் கழகச் செயலாளர்கள் காடுவெட்டி தியாகராஜன், வைரமணி, நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஸ்டாலின் குமார், கதிரவன், மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் அம்பிகாபதி, மயில்வாகனன், கனகராஜ், தர்மன் ராஜேந்திரன், பானுமதி கண்ணன், செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்மாறன், இளைஞர் அணி துணைச் செயலாளர் ஆனந்தகுமார், தொகுதிப் பார்வையாளர் தங்க கமல், பொதுக்குழு உறுப்பினர்கள் கிட்டப்பா, பூபதி, நகரக் கழகச் செயலாளர் மெடிக்கல் முரளி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் அண்ணாதுரை, சரவணன், வீரபத்திரன், முத்துச்செல்வன், அசோகன், பேரூர் கழகச் செயலாளர்கள் வெள்ளையன், நடராஜன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.ஆர்.கே.கார்த்திக், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் செல்லமுத்து, அம்மன் பாபு, சுரேஷ்குமார், கிருபா, வழக்கறிஞர் நரேன், லெனின், சேகர், பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சிலம்பரசன், முத்து துரை, கலையரசன், மருது சேகர், ராஜேஷ், சிவ நடராஜன், நகர் மன்றத் தலைவர் செல்வராணி மலர்வண்ணன், பேரூராட்சித் தலைவர்கள் மேகலா வெள்ளையன், சசிகலா ராஜசேகர் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில்கள்!

**கேள்வி – பதில்கள்**

**பெரியசாமி, துறையூர் கிழக்கு ஒன்றியம்.**

**கேள்வி:** உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு முழுமையான தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமா?

**துணை முதலமைச்சர் :** நம் தலைவர் அவர்கள் இந்த அறிவித்ததற்கு முக்கியமான குறிக்கோள் என்ன வென்றால், அரசு சார்ந்த அடிப்படை வசதிகள், மக்கள் வாழ்கின்ற இடத்திற்கே சென்று, அரசு அதிகாரிகள் மூலமாக பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இதுவரைக்கும் அந்த முகாம்களில் பெறப்பட்ட 18 லட்சம் மனுக்களில் 12.25 லட்சம் மனுக்களுக்கு தீர்வும் காணப்பட்டுள்ளது. கண்டிப்பாக இந்தத் திட்டத்தில் உங்கள் அருகாமையில் உள்ள அனைத்து மக்களும் பயனடைவதை கிளைச் செயலாளர்கள் நீங்கள் உறுதிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கே.கபில்தேவ், துறையூர் நகரம்**

**கேள்வி:** பா.ஜ.க.விடமிருந்து தமிழ்நாட்டை தி.மு.க.வால் காக்க முடியுமா?

**துணை முதலமைச்சர் :** இந்தியாவிலேயே பி.ஜே.பி-யை எதிர்த்து அரசியல் செய்து, போராடிக்கொண்டு இருக்கின்ற ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்றக் கழகமும், நம் தலைவர் அவர்களும்தான். நீட் தேர்வு, தொகுதி மறுவரையறை, ஒன்றிய பட்ஜெட்டில் பாரபட்சம், ஜி.எஸ்.டி நிலுவைத்தொகை, இந்தித் திணிப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம், கல்வி நிதி மறுப்பு இப்படி எல்லாவற்றிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசும் நம் மாநில உரிமைகளை எல்லாம் பறிக்கின்ற நேரத்தில், அதை எதிர்த்து குரல் கொடுக்க்கூடிய ஒரே தலைவராக நம் தலைவர் அவர்கள் திகழ்ந்துகொண்டு இருக்கிறார்.

**டி.ரமேஷ், துறையூர் கிழக்கு ஒன்றியம்.**

**கேள்வி:** கூட்டணிக் கட்சிகளை அரவணைத்து செயல்பட்டால், நம் அணி வெற்றிப்பெறபோவது உறுதி தானே?.

**துணை முதலமைச்சர் :** நிச்சயம் நீங்கள் சொல்வது 100 சதவிகிதம் சரி. எதிர்க்கட்சியில் இருக்கின்ற நிர்வாகிகளே அணி அணிகளாகப் பிரிந்து செயல்பட்டு வரும் வேளையில், நம் தலைவர் அவர்கள் நம் கூட்டணிக் கட்சிகளையெல்லாம் 2018-லிருந்து அரவணைத்து வருகிறார். இது வெறும் தேர்தலுக்காக அமைந்த கூட்டணி கிடையாது. தி.மு.க-வில் கூட்டணி பற்றி பேசுகிற தலைவர்களுக்கு, தனியாக கூட்டணி பேச்சுவார்த்தை என்ற குழுவைத் தலைவர் அமைப்பார்கள். அந்தக் குழு, கூட்டணிக் கட்சித் தலைவர்களிடம் அறிவாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தி, பேசி முடித்துவிட்டு, தலைவரைப் பார்த்து கூறியதும், அந்தக் கூட்டணி அறிவிப்பு வெளியாகும்.

ஆனால், அ.தி.மு.க-வின் கூட்டணி அறிவிப்பு, பேச்சுவார்த்தை எல்லாம் ஏதாவது ஒரு ஸ்டார் ஓட்டலில்தான் நடக்கும். ஏனென்றால், அது அவர்களுக்கு பிசினஸ் டீலிங். நாம் அமைப்பது கொள்கைக் கூட்டணி. அதனால்தான் மக்கள் நம் கூட்டணிக்குத் தொடர்ந்து அவர்களின் ஆதரவை அளித்து வருகிறார்கள். தலைவர் அவர்கள் எந்தக் கூட்டணி அமைத்தாலும், நீங்கள் களத்தில் இறங்கி, அவர்களுடன் செயல்பட்டு, நம் கழகத்தை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

**நடராஜன், துறையூர் கிழக்கு ஒன்றியம்.**

**கேள்வி:** கழகத் தோழர்கள், நம் அரசினால் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறுவார்களா?

**துணை முதலமைச்சர் :** மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒரு வரலாறு உண்டு. இந்தியாவிலேயே முதன்முறையாக, தருமபுரியில் 1989-ஆம் ஆண்டு, மகளிர் தன் சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக, பொருளாதார சுதந்திரத்தை அடைய வேண்டும் என்று மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஆரம்பித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதற்கு பிறகுதான் மற்ற மாநிலங்களில் அதை ஆரம்பித்தார்கள். நம் தலைவர் அவர்களை அந்தத் துறைக்கு அமைச்சராக கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். நான் அமைச்சரானாவுடன் என்னிடத்தில் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார்கள். நான் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், ஒரு மணி நேரம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளின் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தி வருகின்றேன். எந்த மாநில மகளிர் சுயஉதவிக் குழுக்களும் செய்யாத சாதனைகளை நாம் செய்திருக்கிறோம். மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி நம் தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். மகளிர் சுயஉதவிக்குழுக்களில் இருக்கின்ற அனைத்து சகோதரிகளுக்கும் விரைவில் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

**பா.சுரேஷ், துறையூர் மேற்கு ஒன்றியம்.**

**கேள்வி:** இளைஞர் அணியை கிளைக்கழகம் வரை விரிவுப்படுத்துவீர்களா?

**துணை முதலமைச்சர் :** அதற்கு இளைஞர் அணிச் செயலாளராக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இளைஞர் அணியைப் பொறுத்தவரைக்கும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றியம் வரை இருந்தது. தலைவரின் ஒப்புதலைப் பெற்று இன்று கிளைக் கழகம்வரை நியமிக்க ஆரம்பித்துள்ளோம். இப்போது அதற்கான நியமன பட்டியல் ஒவ்வொரு மாவட்டமாக முரசொலியில் தினந்தோறும் வெளி வந்துகொண்டு இருக்கிறது. நம் மாவட்டத்திலும் கிளை, வட்டம் வாரியாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமித்து, விரைவில் அந்த அறிவிப்பு வெளி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு தேர்தல் வேலையை அனைவரும் தொடங்கிவிட்டார்கள். நாமும் தொடங்கிவிட்டோம். ஆனால், நமக்காக இன்னொருவர் தேர்தல் வேலையைத் தொடங்கி இருக்கிறார். அவர் யார் என்றால், அவர் நம் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். சமீபத்தில், அவர் ஒரு நிகழ்ச்சியில் பேசி இருக்கிறார். தமிழ்நாட்டில் எங்கு சென்று பார்த்தாலும், எல்லா இடத்திலும் எழுதி வைத்துள்ளார்கள். அது என்னவென்றால் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று எழுதி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு யாருடன் போராடும், தமிழ்நாடு யாருடன் வெல்லும் என்று கேள்வி கேட்டிருந்தார்.

நம் தலைவர் அவர்கள் அதற்கு பதில் சொன்னார். தமிழ்நாடு சங்கிகளை எதிர்த்து நிச்சயம் போராடும். தமிழ்நாடு அடிமைகளை எதிர்த்து நிச்சயம் போராடும். தமிழ்நாடு சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிக்கிற பாசிஸ்ட்டுகளை எதிர்த்து போராடும். திருவள்ளுவருக்கு காவி உடையை அணிவிக்கும் காவிகளை எதிர்த்துப் போராடும்.

ஆர்.என்.ரவி அவர்களை நம் தலைவர் அவர்கள் ஆல் அவுட் ரவி ஆக்கிவிட்டார். எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான் அ.தி.மு.க-வின் நிரந்தரப் பொதுச்செயலாளராக இருக்க வேண்டும் என்று எப்படி கோரிக்கை வைத்துள்ளோமோ, அதே போல நம் தலைவர் அவர்கள் தயவுசெய்து தமிழ்நாட்டு ஆளுநரை மாற்றிவிடாதீர்கள், அவர்தான் தமிழ்நாட்டின் நிரந்தர ஆளுநராக இருக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். ஒன்றிய பாசிச பா.ஜ.க.வையும், அதனுடன் கூட்டணி வைத்துள்ள அடிமைக் கூட்டத்தை விரட்டி அடிக்க வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் நமக்கு இருக்கிறது.

பூத் கமிட்டி உறுப்பினர்கள் அடுத்த 5 மாத காலம் மக்களுடன் நீங்கள் நெருங்கிப் பழக வேண்டும். அவர்களின் குறைகளைக் கேளுங்கள். நம்மால் செய்ய முடிந்ததை உடனே செய்து கொடுங்கள். உங்களால் செய்ய முடியவில்லை என்றால் மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்களின் கவனதுக்கு எடுத்து சென்று அதை தீர்த்து வையுங்கள்.

கழகத்தின் வரலாற்றை, அரசின் திட்டங்களை மக்களிடம் தொடர்ந்து பேசிக்கொண்டே இருங்கள். களத்தில் எப்படி செயல்படுகிறோமோ, அதேபோல் இப்போது சமூக வலைதளத்திலும் சிறப்பாக செயல்பட வேண்டும். இங்கு வந்திருக்கின்ற இளைஞர்கள் அடுத்த 5 மாதம் சிறப்பாக சமூக வலைதளத்தில் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்மிடம் கொள்கை, அரசின் திட்டங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் மக்களிடம் எடுத்துச் சொல்கின்ற கடமை நம்மிடம் இருக்கிறது. தலைவர் அவர்கள் நாம் 200 தொகுதிகள் வெற்றிபெற வேண்டும் என்று இலக்கு கொடுத்திருக்கிறார். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து ஒரே இலக்கோடு செயல்பட்டால், 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழக அணி நிச்சயம் வென்று காட்டும்.

அந்தக் கணக்கை துவங்குகின்ற முதல் தொகுதியாக நம் துறையூர் சட்டமன்றத் தொகுதி இருக்க வேண்டும். அதை நீங்கள் நிறைவேற்றி காட்டுவீர்கள். நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், அதற்கு நம் உழைப்பு மிகமிக முக்கியம் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் இருக்கின்ற 9 தொகுதிகளிலும் உதயசூரியன் உதித்தாக வேண்டும். அண்ணன் நேரு அவர்கள் அதை களத்தில் உறுதி செய்வார் என்ற நம்பிக்கை நம் தலைவர் அவர்களுக்கு நிரம்ப இருக்கிறது. அவருக்கு உறுதுணையாக மாவட்டச் செயலாளர்களும், கழக நிர்வாகிகள் நீங்கள் அனைவரும் துணை நின்று வெற்றிபெற்று, தலைவரிடத்தில் ஒப்படைக்க வேண்டும்., வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு.